இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 13-09-2025

# மிரட்டுகிறதா தேர்தல் ஆணையம்?

**தேர்தலை நியாயமாக நடத்திக் காட்ட வேண்டிய தேர்தல் ஆணையம், மிரட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறது. "தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியலில் தீவிர திருத்தம்" என்று சொல்லி மிரட்டத் தொடங்கி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் தமிழ்நாடு பயப்படாது.**

தேர்தல் ஆணையம், அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். ஆனால் அதனை பா.ஜ.க. தனது கிளை அமைப்பாக மாற்றி விட்டது. தேர்தல் ஆணையர் தேர்வில் இருந்து உச்சநீதிமன்ற நீதிபதியை எப்போது நீக்கினார்களோ அப்போதே தேர்தல் ஆணையம் தனது சுதந்திர எண்ணத்தை இழந்துவிட்டது. பா.ஜ.க.வால் நினைக்கப்படுகிறவர் தேர்தல் ஆணையராக ஆக முடியும் என்ற சூழ்நிலையானது, தேர்தல் ஆணையத்தை பா.ஜ.க.வின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டது. அதிலும் குறிப்பாக தேர்தல் ஆணையர்களாக வருகிறவர்கள், ஆளும் பா.ஜ.க. அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள். இவர்கள் 'முன்பு நடந்து கொண்டதைப் போலவே' இப்போதும் நடந்து காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்போது தலைமை தேர்தல் ஆணையராக இருக்கும் ஞானேஷ்குமார், ஒன்றிய உள்துறை அமைச்சகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றியவர். உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு நெருக்கமானவர். அதனால்தான் தேர்தல் ஆணையர் ஆனார். பின்னர் தலைமை தேர்தல் ஆணையராகவே கடந்த பிப்ரவரி மாதம் ஆக்கப்பட்டார். இவர், அமித்ஷா கட்டுப்பாட்டில்தான் தேர்தல் ஆணையம் இயங்க வேண்டும் என்ற நினைப்பிலேயே செயல்பட்டு வருகிறார்.

பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் எடுத்து வைத்து அங்கு வாக்குத் திருட்டு எப்படி நடந்துள்ளது என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். இவை இரண்டுக்கும் இதுவரை தலைமை தேர்தல் ஆணையர் பொறுப்பான பதிலை இன்னமும் அளிக்கவில்லை.

"வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் தனது கையெழுத்துடன் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று உறுதி செய்யப்படும். அதற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்" இதுதான் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அளிக்கும் பதில்.

ராகுல் காந்தி எந்தத் தொகுதியைச் சொல்கிறாரோ, அதில் முறைகேடு நடக்கவில்லை என்றால் ராகுலைப் போலவே செய்தியாளர் கூட்டம் நடத்தி, அவர் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் செய்து காட்டியதைப் போல தலைமைத் தேர்தல் ஆணையரும் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் நடத்தி இருக்க வேண்டாமா? அப்படி நடத்தி இருந்தால் ஞானேஷ்குமாரை நியாயவான் எனப் பாராட்டலாம். அதைச் செய்யாமல் மிரட்டினால்...? இவர் என்ன அமித்ஷாவா?

**ஞானேஷ்குமார் நியமனத்தை 'பண்பற்ற நியமனம்' என்று அப்போதே கண்டித்தார் ராகுல் காந்தி. "புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் நியமன நடைமுறை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் 48 மணி நேரத்துக்குள் விசாரணைக்கு வர உள்ள நிலையில், அந்தப் பதவிக்குப் புதியவரைத் தேர்ந்தெடுத்து பிரதமர் மோடியும், அமைச்சர் அமித்ஷாவும் மேற்கொண்ட முடிவு பண்பற்ற நடவடிக்கை" என்று குற்றம் சாட்டி இருந்தார் ராகுல் காந்தி. 'பண்பற்ற நியமனத்தால்' வந்தவர் நெறியற்ற பேச்சைத் தானே பேசுவார்?**

அத்தகைய ஞானேஷ்குமார் தலைமையில் டெல்லியில் நேற்றைய தினம் தேர்தல் ஆணையர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது. பீகார் மாநிலத்தில் நடந்ததைப் போல மற்ற மாநிலங்களிலும் சிறப்பு தீவிர திருத்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் சொல்லி இருக்கிறார்.

சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் இப்பணிகளைத் தீவிரப்படுத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்தச் செயல்பாடுகள் குறித்து உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு விசாரணை நடைபெற்று வரும் போது, அதைப் பற்றிக் கவலைப்படாமல் தேர்தல் ஆணையம் செயல்படுவது சரியல்ல.

ஆதார் அட்டையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொன்னபிறகும், அதனை ஏற்காமல் தேர்தல் ஆணையம் அடம்பிடிக்கிறது. ஆதார் அட்டையை குடிமைக்கான சான்றாக ஏற்க முடியாது என்று உச்சநீதிமன்றம் சொல்வதும் ஏன் என்று தெரியவில்லை. அப்படியானால் ஆதார் அட்டையின் பயன் என்ன? மரியாதை என்ன? அந்த அட்டைக்கு மதிப்பு இருக்கிறதா இல்லையா?

பீகாரில் நீக்கப்பட்டவர்களுக்கான காரணத்தை உச்சநீதிமன்றத்தில் சொல்வதற்கு தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது. உச்சநீதிமன்றம் சொன்ன பிறகுதான் நீக்கப்பட்டவர்கள் பட்டியலையே தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

**உண்மையான, நேர்மையான தேர்தலை நடத்தினால் அதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவது இல்லை. ஆனால் தேர்தல் ஆணையமானது தனது நடவடிக்கைகளை குடியுரிமைச் சட்ட இயக்ககம் போல மாற்றிக் கொண்டே போவது கடும் கண்டனத்துக்குரியது. தேர்தல் ஆணையத்தால் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை, ஒன்றிய அரசால் தரப்பட்ட ஆதார் அட்டை ஆகியவற்றைக் கூட தேர்தல் ஆணையம் மதிக்காமல் இருப்பதுதான் பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.**

தகுதியான அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்கும் உரிமை கிடைக்க வேண்டும். அதனை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இதைத் தவிர அவர்களுக்கு வேறு என்ன வேலை?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.9.2025) சென்னை, பெசன்ட் நகர் மின் மயானத்தில், உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய தனது சம்பந்தியும், சபரீசன் அவர்களின் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு, கமல்ஹாசன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்து குழும இயக்குநர் என்.ராம் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – 'சிம்பொனி' சிகரம் தொட்ட தமிழன்

# இசைஞானி இளையராஜாவுக்கு பொன்விழா ஆண்டு மாபெரும் பாராட்டு விழா!

## நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று நடைபெறுகிறது !

**சென்னை, செப்.13 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பொன்விழா ஆண்டு 50 மாபெரும் பாராட்டு விழா நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று (13.9.2025) மாலையில் நடைபெறுகிறது.**

அதன் விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அன்புமிளிர இசைஞானி என அழைத்துப் போற்றப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளில் 1,500க்கும் மேற்பட்ட திரைப்படங் களில், 8,500க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

1975-ஆம் ஆண்டு துவங்கிய இசைஞானி இளையராஜா அவர்களின் இசைப் பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. திரையிசை மட்டுமின்றி பல்வேறு தனியிசை படைப்புகளையும் வெளியிட்டுள்ளார் இசைஞானி இளையராஜா அவர்கள்.

முழு மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி இசை சிகரத்தையும் தொட்டு சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை படைத்த முதல் தமிழர் மட்டுமல்ல இசைஞானி இளையராஜா முதல் இந்தியரும் ஆவார். ஆசிய நாடுகளைச் சேர்ந்த எவரும்



இச்சாதனையை இதுவரை நிகழ்த்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**முதலமைச்சர் பாராட்டும், வாழ்த்தும்!**

8.3.2025 அன்று இலண்டன் மாநகரில் முதல் நேரடி சிம்பொனி இசைநிகழ்ச்சி நடத்தவிருந்த நிலையில், 2.3.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களைப் பாராட்டி, அவருக்கு நினைவுப்பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள். அது குறித்து சமூக வலைதளப்பதிவில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது,

"தம் கைப்பட எழுதிய Valiant Symphony இசைக்குறிப்புகளை உற்சாகத்துடன் காட்டி மகிழ்ந்தார். உலகத் தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த இசை மூச்சான இளையராஜா அவர்களின் கணக்கற்ற சாதனைகளில் இந்தச் சாதனை ஒரு மணி மகுடமெனத் திகழ வாழ்த்துகிறேன்!" என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, இலண்டன் மாநகர் சென்று சிம்பொனி சாதனை நிகழ்த்தி வெற்றியுடன் சென்னை திரும்பிய நிலையில் 13.3.2025 அன்று இளையராஜா அவர்கள் முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்து, நன்றி தெரிவித்தார்கள்.

**முதலமைச்சர் அறிவித்த பாராட்டு விழா!**

இதன் பின்னர், முதலமைச்சர் அவர்கள், தம்முடைய வலைதளப் பதிவில்,

**"இலண்டன் மாநகரில் சிம்பொனி சாதனை படைத்து திரும்பியுள்ள இசைஞானி இளையராஜா அவர்கள் அவரது பயணத்துக்கு வாழ்த்திய என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார். அவரது அரை நூற்றாண்டு காலத்திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம்.!"** என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இதன்படி, இன்று (13.9.2025 சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் திரையுலகில் பொன் விழா காணும் சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மிகப் பெரிய அளவில் பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இன்னிசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜா அவர்களின் சிம்பொனி இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை வழங்குகிறார்கள். தொடர்ந்து நடைபெறும் பாராட்டு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்கள். உலக நாயகன் கமல்ஹாசன் எம்.பி., அவர்களும், சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். நிறைவாக இசைஞானி இளையராஜா எம்.பி., அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

இவ்விழாவில். அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், திரைக் கலைஞர்கள், திரைத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தமிழ்த் திரையுலக முக்கிய பிரமுகர்கள் முதலானோரும் பங்கேற்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நன்றி கூறுகிறார்.

## திருவண்ணாமலை மாவட்டக் கழக அனைத்து அணியினரும்

# கரூர் - கழக முப்பெரும் விழாவில் அணி திரள்வோம்! ஆர்ப்பரிப்போம்!

## அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



*திருவண்ணாமலை, செப்.13 -*

*கரூரில் செப்டம்பர் 17 அன்று கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கரூரை நோக்கி அணி திரள்வோம், ஆர்ப்பரிப்போம் என்று பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.*

*இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கையில்...*

*கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜனநாயகம் என்ற கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக்கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16,*

*பாராட்டி போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17,*

*ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.*

*இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெற வுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக் கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்ற கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கரூர் மாநகர் நோக்கி அணி திரள்வோம், ஆர்ப்பரிப்போம்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.*



திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் புதியதாக கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை கட்டிடத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணை தலைவர் ஜோதி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.